செ.வெ.எண்:78/ மே /2020 நாள்: 26.05.2020

**திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்:**

----------------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தொடர்பாக **76** நபர்கள் சிகிச்சை பெற்று வந்தனர். இதில் **66** நபர்கள் பூரண குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இன்று 02 நபர்கள், பெரம்பலூர் மாவட்டத்தினை சார்ந்த 2 நபர்கள், இரயில்வே தனிமைப்படுத்தப்பட்ட முகாமில் 01 நபர் என ஆக மொத்தம் 5 நபர்கள் மருத்துவமனையிலிருந்து பூரண குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தினைச் சார்ந்த 8 நபர்களும், பெரம்பலூர் மாவட்டத்தை சார்ந்த 1 நபர்கள், தேனி மாவட்டத்தை சார்ந்த 1 நபர், ஆக கூடுதல் 10 நபர்கள் சிகிச்சைப்பெற்று வருகின்றனர். அனைத்து நபர்களும் நலமுடன் உள்ளனர்.

தேவையில்லாமல் வெளியில் நடமாடுவதை பொது மக்கள் தவிர்க்க வேண்டும். **விழித்திரு - விலகி இரு - வீட்டில் இரு** என்பதை கடைபிடிக்க வேண்டும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை கொரோனா வைரஸ் நோய் இல்லாத மாவட்டமாக மாற்றுவதற்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**